

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42(அ) வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு வட்ட செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வட்டக் கழக அலுவலகத்தில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், வெ.சு. சத்யநாராயணன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.பி.சதீஷ்குமார், என்.எம்.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ப.ஆ.சண்முகம், மா.ரூபசங்கர், பி.கே.மூர்த்தி, எம்.எம்.சாமி, கே.தேவதாஸ், கே.மணி, ஜி.எம்.பிரபு, த.குமரேசன், ச.குமரன், வி.எஸ்.டி பாலாஜி, வி.செல்வமணி, கோ.அரிராமன், தே.ஜனார்த்தணன், ஜே.வசந்தகுமார், தே.கண்ணன், சி.கார்த்திக், ஜே.மகேஸ்வரி, எம்.கலைவாணி, எஸ்.வி.சிவா மற்றும் நிர்வாகிகள், பாக முகவர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா பகுதி கழக செயலாளர்,மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி தலைமையில் ப.காளேஸ்வரன் உமாசங்கர்,பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பா.கவிதா,பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன்,இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு.மனோகரன்,ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ,எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் அனைத்து வட்டங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி கலைஞரின் திரு உருவப் படத்துக்கு மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர்.

### திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில்

# பச்சிளம் குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் வழங்கும் திட்டம்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

திருச்செந்தூர்,ஜுன்.4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு இன்று (02.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து, காய்ச்சிய பாலை பச்சிளம் குழந்தைகளின் தாயிடம் வழங்கினார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் திருப்பணிகள் மற்றும் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகளை துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியரோடு நேற்றைய தினம் இரவு 8 மணி முதல் 12 மணி வரை ஆய்வு செய்தோம். திருக்கோயிலில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள், குடமுழுக்கின் போது பக்தர்களுக்கு செய்து தரவேண்டிய வசதிகள் ஆகியவற்றை பக்தர்கள் கூட்டம் இல்லாத போது ஆய்வு செய்தால் தான் முழுமையாக கண்டறிய முடியும் என்பதால் தான் இரவு நேரத்தில் ஆய்வு செய்தோம். இத்திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளான முடிக்காணிக்கை மண்டபம், நாழிக்கிணறு செல்லும் பாதை, அறுபடை வீடுகளை ஒன்றாக தரிசிக்கும் வகையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், பக்தர்களுக்கான வரிசை முறை, அங்குள்ள குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், விழாக் காலங்களில் சுமார் 20 ஆயிரம் வாகனங்களை நிறுத்துவதற்காக 4 இடங்களில் ஏற்படுத்தப்பட்டு வரும் வசதிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தோம்.

வருகின்ற 07.07.2025 அன்று நடைபெற உள்ள திருச்செந்தூர் திருக்கோயிலின் குடமுழுக்கில் இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். அதற்கு தகுந்தாற்போல பக்தர்களுக்கு தேவையான உணவு வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள், மருத்துவ வசதி போன்ற வசதிகள் குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்தோம். திருக்கோயிலுக்கு வருகின்ற சாலைகளில் இருக்கின்ற பழுதுகளை குடமுழுக்கிற்கு முன்னதாகவே சரிசெய்திடவும், தேவைப்படும் இடங்களில் புதிய சாலைகள் அமைப்பதற்கும் நெடுஞ்சாலைத்துறையினர் உறுதியளித்துள்ளனர். இத்திருக்கோயிலின் குடமுழுக்கு கடந்த முறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. கலைஞர் அவர்களின் வழிதோன்றல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தான் மீண்டும் இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு மிக சிறப்பாக நடைபெற உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2025 - 2026 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின் போது, “சுவாமி தரிசனம் செய்ய வருகை தரும் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்கு 10 திருக்கோயில்களில் தினசரி காய்ச்சிய பால் வழங்கப்படும் என அறிவித்தோம். அதனை இன்று காலை திருச்செந்தூரில் தொடங்கி வைத்தோம்.

இத்திட்டமானது திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருவரங்கம், அரங்கநாதசுவாமி திருக்கோயில், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில், திருத்தணி, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ஆனைமலை, மாசாணியம்மன் திருக்கோயில், பண்ணாரி, மாரியம்மன் திருக்கோயில், திருப்பரங்குன்றம், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் இன்று முதல் செயல்படுத்தப்பட்டு, காய்ச்சிய பால் வழங்கப்படுகிறது. இதற்கான செலவு ரூ. 50 இலட்சம் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டமானது தரிசனத்திற்கு வரிசையில் காத்திருக்கும் பச்சிளம் குழந்தைகளின் பெற்றோருக்கும், பச்சிளம் குழந்தைகளுக்கும் பேருதவியாக இருக்கும். இதனை தொடங்கி வைத்த பின்னர் திருக்கோயிலில் அனைத்து பக்தர்களும் தெரிவித்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள் பக்தர்களுக்கு இதுபோன்ற நலப்பணிகளையும், வசதிகளையும் தொடர்ந்து செய்து தருவதற்கு ஓர் ஊக்கமாக இருக்கின்றது.

திருக்கோயிலில் குடமுழுக்கிற்கு முன் மற்றும் பின் முடிக்கப்பட வேண்டிய பணிகள் எவை எவையென பட்டியலிட்டு மேற்கொண்டு வருகின்றோம். குறிப்பாக திருக்கோயிலுக்கு வருகின்ற பாதைகளில் நடைபெறுகின்ற பணிகள் குடமுழுக்கிற்கு முன் முழுமையாக நிறைவு செய்யப்படும். இதரப் பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைவுபடுத்திட உள்ளோம். வார இறுதி நாட்கள், சஷ்டி மற்றும் கிருத்திகை நாட்களில் சுமார் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருகின்றனர். அந்த நாட்களில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் மருத்துவ வசதியை அதிகப்படுத்திடவும் அறிவுரைகள் வழங்கி உள்ளோம்.

திருச்செந்தூர் திருக்கோயில் குடமுழுக்கு சிறப்பாக நடைபெற மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், மதிப்பிற்குரிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், துறை அலுவலர்கள் என அனைவரும் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். ஆகவே குடமுழுக்கிற்கு முன்னதாக குறைந்தபட்சம் நான்கு முறையாவது முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்திட திட்டமிட்டுள்ளோம். இத்திருக்கோயில் குடமுழுக்கு செம்மையாக, நேர்த்தியாக, எங்கு பார்த்தாலும் அரோகரா என்ற கோஷம் எழும் அளவிற்கு சீரோடும், சிறப்போடும் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, இ.ஆ.ப., பொ. ஜெயராமன், இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ். ஞானசேகரன், திருக்கோயில் தக்கார் ஆர், அருள் முருகன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாறன், வட்டாட்சியர் திரு, பாலச்சந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி வழி காட்டுதலின்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்ததினத்தை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி 15 வது வார்டுக்கு உட்பட்ட மலங்கானந்தபுரம், குளத்துமேடு மற்றும் ஈஸ்வரி நகர் அகிய பகுதிகளில் மாமன்ற உறுப்பினர் வட்ட கழக செயலாளர் டி.வி. ராஜேந்திரன் தலமையில் கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு வழங்கபட்டது. உடன் தலைமை பொது குழு உறுப்பினர் திரு.மு.ரஞ்சன்,மாவட்ட பிரதிநிதி குளத்துமேடு மு.நாகலிங்கம் ,பகுதி துணை செயலாளர் வ. முத்து ,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் டி.வி.ஆர்.கௌதம் பாபு ,15 வது வார்டு இளைஞரணி அமைப்பாளர் எஸ்.சரவணபாலன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மகளிரணி, மாணவரணி, இளைஞரணி உடன் பிறப்புகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு கிளை கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாவதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., புழல் ஒன்றிய செயலாளர் ச.அற்புதராஜ் ஆகியோர் ஆலோசனைப்படி, கிளை செயலாளர் ஆர்.ஸ்டாலின் தலைமையில் மாவட்ட நெசவாளராணி தலைவர் இ. பாஸ்கரன், மாவட்ட தொண்டர் அணி தலைவர் ஜெ.முருகன், புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ.யுவராஜ் ஆகியோர் அண்ணா சிலை , முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கினர். உடன் பி. ராஜேந்திரன், ஏ.கஜபதி, டில்லி ரமேஷ், ஆர்.டி.தேவதாஸ், பி. சுரேஷ், ஜெ.கபிலன், என்.தேவானந்தம், நெல்சன், ஏ.ஜோதி, கே.கருணாநிதி, இ.போஸ், தேவராஜ், ஜி.பிருதிவிராஜ், ஆர்.நெடுமாறன், தே. ஜெனீஸ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மாவட்ட திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளர், 2 வது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் வட்டச் செயலாளர்கள் வா.முத்துசாமி, தச.கரிகாலசோழன், சாலை டி.கணேசன், மு.செல்வம், ஏற்பாட்டில் 18, 20 மற்றும் 21, 22 ஆகிய வார்டுகளின் சார்பில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, கழக கொடி கம்பங்கள் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. இதில் வி.ஜி.தினகரன், ஆர். டி.ரமேஷ் குமார், துர்கா கோதண்டம், எம்.எஸ்.நாகலிங்கம், செல்வ ராஜ், ஞான மூர்த்தி, கேபிள் வேல் கணேசன், உதயராஜ், ஏ.வி.முருகன், கதிரவன், ஜெயா, சுமித்ரா, ஸ்டாலின், மகேந்திரன், சுரேஷ், மணிகண்டன், சதீஷ்குமார், மற்றும் கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### திருவொற்றியூர் மேற்கு பகுதியில்

# கலைஞர் பிறந்தநாள்- செம்மொழி நாளாக எழுச்சிமிகு கொண்டாட்டம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்பு! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

சென்னை,ஜுன்.4-

ஜுன் -3 தமிழ்நாட்டின் நவீன சிற்பி செம்மொழி காவலர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழகத்தலைவர் ஆணையேற்று திருவொற்றியூர் மேற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழக இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கி செம்மொழி நாளாக வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகில் 3-6-25 மதியம் 12:00 மணியளவில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதாவரம் எஸ்.சுதர்சனம் எம். எல். ஏ அவர்கள் பங்கேற்று அய்யா கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி வணங்கப்பட்டது. தொடர்ந்து பொதுமக்கள் ஆயிரம் பேருக்கு பிரியாணியுடன் இனிப்பு வழங்கிப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் பகுதி கழக துணை செயலாளர்கள் இ.குமரவேல், யு. எஸ். குறளரசன், பொருளாளர் எம்.வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர்கள் டி. சேகர், மு. மாணிக்கவேலன், கே. பவுல், கி. கண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் ஆர். தினேஷ் குமார், எம்.சந்திரகுமார், ந.ராம்குமார், முருகா எஸ். ஆறுமுகம், ஆர்.மோகனசுந்தரம் , பொன்.கோ. விஜயன், எஸ். ஆர். மலைராஜ், எஸ்.கணேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்/ துணை அமைப்பாளர்கள் ஆர். டி.மதன்குமார், வி. தியாகராஜன், ஆர்.நவகுமார் , தழவை எஸ்.ரஞ்சித், வை.ம.கண்ணதாசன், டி.சக்கரவர்த்தி, லிவிங்ஸ்டன் ராஜ்குமார், ஆர்.லோகு, டி.கர்ணன், ஜெகன் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கிராம நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாமல் திரளாக பங்கேற்றனர்.

### வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் துரைகண்ணன் ஏற்பாடு

# எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., கேக் வெட்டி, இனிப்புகளை வழங்கினார்

சென்னை,ஜுன்.4-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பில் எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் இவ்விழாவில் கலந்துகொண்டு கேக் வெட்டி, இனிப்புகளை வழங்கினார்.

எழும்பூர் பெருநகரக் குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவரும் சென்னை கிழக்கு மாவட்டக் கழக வழக்கறிஞர்கள் அணியின் மாவட்ட அமைப்பாளருமான வழக்கறிஞர் துரைகண்ணன் இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்து தலைமை தாங்கினார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக வழக்கறிஞர் அணியின் மாவட்டத் தலைவர் ஜி.குணசேகரன் நன்றியுரை ஆற்றினார்.

இவ்விழாவில் கழக வழக்கறிஞர்கள் அணியின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஏ.சேதுராமன், என்.வேலன்; எழும்பூர் பகுதி அமைப்பாளர் எம். சந்துரு, பகுதி துணை அமைப்பாளர்கள் எஸ். சதிஷ், கோடீஸ்வரன்; எழும்பூர் நீதிமன்ற அமைப்பாளர்கள் எம்.கே.டி. ராஜன், ஏ.இ.சண்முகசுந்தரம் மற்றும் அந்நீதிமன்றத்தைச் சேர்ந்த கழக வழக்கறிஞர்கள், மூத்த வழக்கறிஞர்கள், பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திரு.வி.க. நகர் மண்டலத்திற்குட்பட்ட

# நேர்மை நகர் மயானபூமி சரிபார்க்கும் பணிகள்!

சென்னை,ஜுன்.4-

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-66க்குட்பட்ட நேர்மை நகர் மயான பூமியில் உள்ள எரிவாயு தகன மேடையின் புகைபோக்கி பழுதுகளை சரிபார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதால், 28.05.2025 முதல் 04.06.2025 வரை மேற்கண்ட மயானபூமியில் எரிவாயு தகன மேடை இயங்காது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது, இந்த மயான பூமியில் பழுதுகளை சரிபார்க்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் 05.06.2025 முதல் 14.06.2025 வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, மேற்கண்ட மயானபூமியில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெறும் நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-67க்குட்பட்ட தாங்கல் மயானபூமியினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 – வது பிறந்த நாளை (செம்மொழி நாள்) முன்னிட்டு 167–வது வட்டத்தில் வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், துர்கா நடராஜன் எம்.சி. ஆகியோர் ஏற்பாட்டில் பகுதி கழக செயலாளர் என். சந்திரன் எம்.சி. ஸ்டேட் பேங்க் காலனியில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு 03.06.2025 நேற்று மாலை அணிவித்து, கழக கொடி ஏற்றி, தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள், பொதுமக்கள், கழகத் தோழர்கள் அனைவருக்கும் காலை சிற்றுண்டி 500 நபர்களுக்கு வழங்கினார். இதில் எம்.எஸ்.கே. இப்ராஹிம், சாய் ஜெய்காந்த் பாரதி, ஆர். ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், பாண்டிச்செல்வி, விஜயலட்சுமி, கேசவன் (எ) எழிலரசு, வாஞ்சிநாதன், ஜி.சுந்தர்ராஜன், ஆர். பாபு, ஏ. சாலமோன் எம்.சி., ஈ. ரமேஷ், இ. உலகநாதன், டி. ஜேசுதாஸ், கே. ஆர். ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன், ஏ.ஆர். சரவணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருவல்லிக்கேணி 119வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 ஆம் ஆண்டு பிறந்தநாள்யொட்டி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி வட்ட செயலாளர் க.வே மோகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே. சிற்றரசு திருவல்லிக்கேணி பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் ,மாமன்ற உறுப்பினர் திருமதி.வே.கமலா செழியன், வி.என்.ராஜன் ரவி. ராஜ்குமார் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் பாகத் தலைவர்கள் ஆகிய கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் பா.பாலஉமாபதி நிகழ்ச்சி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா கேக்வெட்டி இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், தலைமைக் கழக பேச்சாளர் வாசு.கருணாநிதி, மாவட்ட பிரதிநிதி பி.எஸ்.சைலஸ், கு.தமிழ்மணி, போட்டோ செந்தில், டி.இ.பரணி குமார், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.